சிவகங்கை மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணாவின் 115ஆவது பிறந்தநாள் விழா!

அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் - மு.தென்னவன் - தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, செப். 21-

சிவகங்கை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் 115 ஆவது பிறந்தநாள் விழா மாவட்டம் முழுவதிலும் சிறப்பாக கொண்டாடப் பட்டது.கழகக்கொடி ஏற்றியும் , பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கியும் கழக நிர்வாகிகள் கொண்டாடினார்கள்...

காரைக்குடி

காரைக்குடியில் பேரறிஞர் அண்ணா திருஉருவச் சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி நகர் கழக செயலாளர் என்.குணசேகரன், நகர்மன்ற தலைவர்.சே.முத்துதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, திருமதி தெய்வானை இளமாறன், ஆதி.கண்ணாத்தாள், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார்,தகவல் தொழில்நுட்ப அணி கலாகாசிநாதன், நிர்வாகிகள். சன் சுப்பையா, சொ.கண்ணன், மெ. பழனி, இராம. அன்பழகன், அ.சேவியர், போஸ் குணசேகரன், சே.சொக்கலிங்கம், இலக்கிய அணி காரை. சுரேஷ், ஜான். கென்னடி, உதயம் ராசு, துரை. நாகராஜ், மெ. கார்த்திக், அண்ணை மைக்கேல், முகமது சித்தீக், நாச்சம்மை சிவாஜி, டெசோ, நகர்மன்ற உறுப்பினர்கள் துரை. அரிதாஸ், ராணி செய்தூரண் சேட், சத்யாகார்த்தி கேயன், முத்துபழனியப்பன், மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், திவ்யா சக்தி, மலர்வழி பழனியப்பன், விஷ்ணு பெருமாள், தனம் சிங்கமுத்து, பூமிநாதன், ஜான் பீட்டர், என்ஜினீயர் மைக்கேல், பிரசன்னா, கார்த்திக், இரா. சிவக்குமார், விஜயகுமார், சொ.ராதாகிருஷ்ணன், மா. பாண்டி,

சுப .சிதம்பரம், பா. கணேசன், சலீம், சாய் சுரேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னத் துரை, குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், கே. ஆர். ஆனந்த், லெ.ரவிச்சந்திரன், நாகனிரவி, பூபால சிங்கம், தேவகோட்டை நகர் செயலாளர் பெரி. பாலா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார்,அயலக அணி சன்சீமான். சுப்பையா, ஒன்றியத் துணை செயலாளர் முத்துக்குமார் சிறுபான்மை அணி சேவியர் , நெசவாளர்அணி தாமரைக் கண்ணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் அனைவருக்கும் அமைச்சர் பெரிய கருப்பன் இனிப்புகளை வழங்கினார். தமிழக முதல்வரின் இரண்டரை ஆண்டின் ஆட்சியில் செய்த சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார்.

சிவகங்கை

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் நீதிமன்ற சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு நகர்கழக செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து, ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், நகர் மன்ற துணைத் தலைவர் எம். கார் கண்ணன், நிர்வாகிகள் மதார், ஆறு.சரவணன் இளைஞரணி அயூப் கான், அரிஹரன், ஜெயகாந்தன் சரவணன், விஜய குமார், சோமசுந்தரம், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி தில கவதி கண்ணன், முத்துமணி, மஞ்சுளா, ஹரிகரன் நகர்மன்ற உறுப்பினர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரை

மானாமதுரையில் அண்ணா சிலைக்கு நகர்கழக செயலாளர் க.பொன்னுச் சாமி அண்ணா சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ நகர்மன்ற தலைவர் எஸ். மாரியப்பன்கென்னடி,

துணைத்தலைவர் பாலா சுந்தர், ஒன்றிய செயலாளர்கள் துரை .ராஜா மணி, எம். அண்ணாதுரை, ஒன்றிய குழு தலைவர் லதா அண்ணாதுரை, துணை தலைவர் முத்துச்சாமி, நிர்வாகிகள் ரவிச்சந்திரன், கார்த்தி, பாஸ்கரன், மூர்த்தி, மகளிர் அணி சண்முகப்பிரியா, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . திருப்புவனம் . திருப்புவனத்தில் பேரறிஞர் அண்ணாவின் படத்திற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் பேருர்கழக செயலாளர் நாகூர் கனி ஒன்றிய செயலாளர்கள் எம்.ஏ.கடம் பசாமி திருமதி வசந்தி சேங்கைமாறன், மீனவரணி அண்ணாமலை மகேந்திரன் விவசாய அணி சேகர் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரஹ்மத்துல்லா கான் மகேந்திரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

இளையான்குடி

இளையான்குடியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன் தலைமையில் அண்ணாவின் திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற தலைவர் பி.ஏ.நஜ்முதீன், துணைத்தலைவர் இப்ராஹிம், நிர்வாகிகள் சுப. தமிழரசன், காளிமுத்து, கண்ணன், இளைஞரணி பைரோஸ் கான் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கியும் கழக அரசின் இரண்டரை ஆண்டு சாதனைகளை விளக்கும் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இளையான்குடி கிழக்கு ஒன்றின் சார்பில் சூராணத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் வே.தமிழ்மாறன் தலைமையில் அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிந்து நிர்வாகிகள் மரியாதை செலுத்தினார்கள். பொதுமக்களுக்கு இனிப்புகளும் கழக அரசின் 2 ஆண்டுகால சாதனை குறித்த துண்டு பிரசுரங்களும் வழங்கினார்கள்.

திருப்பத்தூர்

திருப்பத்தூர் ஒன்றிய பேரூர் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் த. சேங்கை மாறன்,ஒன்றிய கழக செயலாளர் எஸ் சண்முக வடிவேலு ,பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்தி கேயன், முன்னாள் மாநில இளைஞரணி அமைப்பாளர் திருப்பத்தூர் பஞ்சவர்ணம், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், ஒன்றிய பொருளாளர். ஏ.எம். கண்ணன், நிர்வாகிகள் ராம. ரவி , உதயம் சண்முகம், ஷாஜகான், இளைஞரணி பஷீர் அகமது, வைகைமாறன், மனோகரன், மாவட்ட சுற்றுப்புற சூழல் அணி அமைப்பாளர் அ.வல்லபாய் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, மாவட்ட சிறுபான்மையினர் நல அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ் .எஸ். அருணாச்சலம், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஆகியோர் கலந்து கொண்டார்கள். பொது மக்களுக்கும் கட்சி நிர்வாகிகளுக்கும் அமைச்சர் கே ஆர் . பெரிய கருப்பன் இனிப்புகளை வழங்கினார். .நெற்குப்பை பேரூராட்சியில் பேருர் கழக செயலாளரும் பேரூராட்சி மன்ற தலைவருமான கேபிஎஸ்

பழனியப்பன் மற்றும் நிர்வாகிகள் அண்ணாவின் திருவருவப்ப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் கள்.

தேவகோட்டை

தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி. பாலா தலைமையில் அண்ணாவின் திருவருபடத்திற்கு நிர்வாகிகள் அன்பு செல்வம் இளங்கோ உட்பட நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

27 ஆவது வார்டில் பொதுக்குழு உறுப்பினர் மதார்சேட், சாகீர்உசேன் மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார் கள். காளையார் கோவில் தெற்கு ஒன்றியம் மறவமங்கலத் தில் ஒன்றிய கழக செயலாளர் யோக. கிருஸ்ணகுமார் தலைமையில் நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. முதல்வரின் இரண்டரை ஆண்டு ஆட்சியில் நடைபெற்றுள்ள சாதனை கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வழங்கப் பட்டது.

மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகரூப்பன் ஆலோசனையின் பேரில் மாவட்டம் முழுவதிலும் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் இரண்டு ஆண்டுகளை சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் கலைஞர் மகளீர்உரிமை திட்டம் துவக்கப்படுவதை முன்னிட்டு ஆங்காங்கே கோலப் போட்டிகள் நடைபெற்றது.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனியார் பள்ளிகளில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் செயல்படும் சி.பி.எஸ்.இ., ஐ.சி.எஸ்., எ.ஜி.சி.எஸ்.இ., ஐ.பி. பள்ளிகளைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்கள் இந்த பயிற்சி முகாமில் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை முதன்மை செயலாளர் திருமதி.காகர்லா உஷா பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தனியார் பள்ளிகள் இயக்க இயக்குநர் நாகராஜ் முருகன், சி.பி.எஸ்.இ. மண்டல அலுவலர் தினேஷ் ராம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

நெல்லை மாநகர தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகர கழக அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் நமச்சிவாயம்,அப்துல் கையூம், துபாய் சாகுல்,அண்டன் செல்லத்துரை உள்பட பலர் உள்ளனர்.